# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்.233/2018/பே
ஆணை நாள்: 06–02–2019.

திரு. M. மனோகரன்,
எண்.26D/1, R.C. தெரு,
கீழவாசல்,
எட்டையபுரம்,
தூத்துக்குடி மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
எட்டையபுரம் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

ஆணை.

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம், கீழவாசல் R.C தெரு, எண். 26D/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு.M. மனோகரன் என்பவரது 16.11.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 19.11.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 233/2018 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் பேரூராட்சி 1–வது வார்டில் உள்ள கண்மாய் கரையில் கடந்த 8 வருடங்களாக கடை வைத்து தொழில் செய்து வருவதாகவும், தான் கடை வைத்துள்ள இடத்திற்கு 2013–ஆம் ஆண்டில் இருந்து எட்டையபுரம் பேரூராட்சிக்கு ஆக்கிரமிப்புக் கட்டணம் செலுத்தி வருவதாகவும், கடந்த 25.10.2018 அன்று தான் வீட்டில் இல்லாத சமயத்தில், தனக்கு எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஜெ.சி.பி. டிப்பர் வாகனத்தை வைத்து எதிர் மனுதாரர்கள் தனது கடையினை அடித்து நொறுக்கி ரூ50.000/–க்கு மேல் நஷ்டம் ஏற்படுத்திவிட்டு, தனது வீட்டில் இருந்த தனது மகன் மற்றும் மகளிடம் தகாத முறையில் பேசிவிட்டு சென்றதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் எட்டையபுரம் பேரூராட்சி பகுதியில் சுமார் 1000க்கும் மேற்பட்ட நபர்கள் அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து வீடுகள் மற்றும் கடைகள் கட்டியும், வருடக்கணக்கில் தங்கியுள்ளதாகவும் அவர்களை எல்லாம் விட்டு

விட்டு தான் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பேரூராட்சிக்கு கடிதம் எழுதிய ஒரே காரணத்தினால் தனது கடையினை அடித்து நொறுக்கியுள்ளதாகவும் புகார் தெரிவித்துள்ளார். தனக்கு எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஆக்கிரமிப்பு கட்டணம் செலுத்தி வைத்துள்ள தனது கடையினை சேதப்படுத்திய எதிர் மனுதாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் ரூ.50,000/-ஐ எதிர் மனுதார்களிடமிருந்து பெற்றுக் கொடுக்கக் கோரியும் தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

23.11.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில், மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிட்டதைத் தொடர்ந்து, எட்டையபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 10.12.2018 நாளிட்ட கடிதத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் பேரூராட்சித் துறை சார்ந்த அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் 16.10.2018 நாளிட்ட கடிதத்தில் ஆணையிட்டதைத் தொடர்ந்து, எட்டையபுரம் பேரூராட்சி பகுதிகளில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி மனுதாரருக்கு ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பாக பேரூராட்சி மூலம் 16.10.2018 நாளிட்ட தாக்கீதும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனுதாரர் தாமாக முன்வந்து ஆக்கிரமிப்பினை அகற்றாத காரணத்தினால் பேரூராட்சி பணியாளர்கள் மற்றும் வருவாய்த் துறையினரால் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டதாகவும், மேலும் மேற்படி இடத்தில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் முறையீட்டு மனுதாரரால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ 05.11.2018ம் தேதியிட்ட கடிதம் தூத்துக்குடி மாவட்ட பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதர்கவும், மேற்படி கடிதத்திற்கான தகவல்களுக்கு உரிய கால கட்டத்தில் பதில் மனுதாரருக்கு வழங்கப்பட்டதாகவும், தனது அறிக்கையில் எட்டையபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

19.12.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி, 31.01.2019ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில், 16.11.2018 நாளிட்ட புகார் மனு தன்னால் அனுப்பப்பட்டதாகவும், எட்டையபுரம் பேரூராட்சி 1-வது வார்டில் உள்ள கண்மாய் கரையில் கடந்த 8 வருடங்களாக கடை வைத்து தொழில் செய்து வருவதாகவும், மேற்படி கடை வைத்துள்ள இடத்திற்கு 2013-ஆம் ஆண்டில் இருந்து ஆக்கிரமிப்பு கட்டணம் செலுத்தி வருவதாகவும், தனக்கு முன்னறிவிப்பு ஏதும் வழங்காமலும், தான் இல்லாத சமயத்தில் JCB வாகனத்தை வைத்து மேற்படி கடையினை இடித்து விட்டதாகவும், தான் கோவில்பட்டி J.M.I குற்றவியல் நடுவர் மன்றத்தில் வேலை செய்வதாக தவறாக சொல்லி விட்டதாகவும், தான் மேற்படி நீதிமன்றத்தில் வழக்கமாக வாதாடும் வழக்குரைஞர் திரு.போகர்நாதனிடம் குமாஸ்தாவாக பணிபுரிவதாகவும், மேற்படி பொருள் சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உதவி இயக்குநர் ஆகியோர்களுக்கு மனு செய்ததாகவும், இதுவரை யாரும் விசாரணை செய்யவில்லை எனவும், எதிர் மனுதாரர்களாக பேரூராட்சி செயல் அலுவலர், துப்புரவு பணி மேலாளர் திரு.பாலமுருகன், வாகன ஓட்டுநர், தெரு பராமரிப்பு பணியாளர் திரு.கோபால், வாகன ஓட்டுநர், கோவில்பட்டி வட்டாட்சியர் திரு.வதனால், கிராம நிர்வாக உதவியாளர் மற்றும் பேரூராட்சி அலுவலர்கள் உட்பட 11 நபர்களை சேர்த்துள்ளதாகவும், தனது கடையினை தான் இல்லாத நேரத்தில் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் JCB டிப்பர் லாரி மூலம் அடித்து நொறுக்கி ரூ.50,000/- க்கு மேல் நஷ்டம் ஏற்படுத்திவிட்டதால், தனது கடையினை எவ்வித முன்னறிவிப்பும்

இன்றி சேதப்படுத்திய எதிர் மனுதாரர்கள் மீது போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து தனக்கு ஏற்பட்டுள்ள ரூ.50,000/– நஷ்டத்தினை எதிர் மனுதாரர்களிடமிருந்து பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

19.12.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.த.உஷா தனது வாக்குமூலத்தில், தான் கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலராகவும், கடந்த 25 நாட்களாக எட்டையபுரம் பேரூராட்சி செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும், அதற்கு முன்னர் எட்டையபுரம் பேரூராட்சியில் செயல் அலுவலராக இரண்டு ஆண்டுகளாக பணிபுரிந்ததாகவும், திரு.மனோகரன் முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து தனக்கு தெரியும் எனவும், மேற்படி முறையீட்டு மனுதாரர் எப்பொழுதும் யாரைப் பற்றியாவது புகார் தெரிவிப்பார் எனவும், தான் கோர்ட்டில் பணிபுரிவதாக எல்லோரிடமும் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்வார் எனவும், திரு.அருளப்பன் என்பவர் ஆடு தங்குவதற்கு ஒரு கொட்டகை அமைத்ததாகவும், முறையீட்டு மனுதாரர் இது சம்பந்தமாக எட்டையபுரம் வட்டாட்சியரிடம் புகார் செய்ததாகவும், திரும்பவும் வருவாய் கோட்டாட்சியருக்கும் மனு அளித்ததாகவும் தெரிவித்துள்ளார். கோட்டாட்சியரின் ஆணையின் பேரில் ஆக்கிரமிப்பு செய்த திரு.அருளப்பன், திரு.கன்னியப்பன் மற்றும் முறையீட்டு மனுதாரர் திரு.மனோகரன் ஆகிய மூவரின் ஆக்கிரமிப்புகளையும் அகற்றி விட்டதாகவும், இதற்கான முன்னறிவிப்பு 16.10.2018ல் ஆக்கிரமிப்பு செய்த மூன்று நபர்களுக்கும் அனுப்பப்பட்டு அதற்கான சான்றும் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். சான்றினையும் காண்பித்தார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.4/16323/2017, நாள். 16.10.2018ன் அடிப்படையில் அரசு புறம்போக்கு நிலத்தில் சர்வே எண்.119/B, 224/2 ஆகிய இடங்களில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை தாங்களே முன்வந்து அகற்றவேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் பேரூராட்சி மூலம் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, அதற்கான செலவினம் சம்பந்தப்பட்டவர்களிடமே வசூலிக்கப்படும் என்ற அறிவிப்பு 16.10.2018ல் அனுப்பட்டு மேற்படி ஆக்கிரமிப்புகள் 24.10.2018ல் அகற்றப்பட்டாதகவும், மேற்படி ஆக்கிரமிப்புகள் அகற்றும் போது அவர்களின் பொருட்களை முறையீட்டு மனுதாரரின் குடும்பத்தார்களே (அதாவது) முறையீட்டு மனுதாரரின் மனைவி மற்றும் பிள்ளைகள் எடுத்துக் கொண்டதாகவும், அதற்கான புகைப்படம் மற்றும் வீடியோ ஆதாரங்கள் உள்ளதாகவும் குறிப்பிட்டு, புகைப்பட நகல்கள் காண்பிக்கப்பட்டது. எனவே முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு ஒரு போலியானது எனவும் 21.01.2019 மற்றும் 22.01.2019 ஆகிய தேதிகளில் சுமார் 885 மீட்டரில் உள்ள 60க்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கடைகள் அனைத்தும் அகற்றப்பட்டது எனவும், முறையீட்டு மனுதாரருக்கு அனைவருக்கும் வீடு திட்டத்தில் ஒரு வீடு வழங்கப்பட்டு அந்த வீட்டில்தான் அவர் வசிப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் சட்டத்திற்கு விரோதமாக மின் இணைப்பு பெற்றுள்ளார் எனவும், தனது ஆக்கிரமிப்பு கடையில் ரேஷன் அரிசியினை பதுக்கி வைத்திருந்ததாகவும், பேரூராட்சி பணியாளர்கள் முறையீட்டு மனுதாரருக்கு உதவி செய்து அவற்றை பத்திரமாக வெளியே கொண்டு சேர்த்தார்கள் எனவும் தனது வாக்குமூலத்தில் எட்டையபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான எட்டையபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் எட்டையபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களின் வாக்குமூலம் ஆகியன கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட கட்டணம் செலுத்திய செலுத்து

சீட்டுகளின் பிரதிகளில் "ஆக்கிரமிப்பு ரத்து செய்யும் அதிகாரத்திற்குட்பட்டது" என தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் விசாரணையின்போது முறையீட்டு மனுதாரருக்கு சுட்டிக் காட்டப்பட்டது. மேலும் முறையீட்டு மனுதாரர் தனக்கு பேரூராட்சி மூலம் எந்தவிதமான முன்னறிவிப்பும் அளிக்கப்படவில்லை என தெரிவித்திருப்பது, பேரூராட்சி செயல் அலுவலரால் விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்ட 16.10.2018 நாளிட்ட அறிவிப்பு ஒளி நகல் கடிதம் மூலம் முறையீட்டு மனுதாரரின் தகவல் உண்மைக்கு புறம்பானது என தெளிவாகிறது. மேலும் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வின் நீதிப்பேராணை W.P.(MD)No.22163/2018, நாள்.28.01.2019ல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணையில் நீர்நிலை ஆக்கிரமப்புகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, நீர் நிலை (கண்மாய்க்கரை) ஆக்கிரமிப்புக்கடை அகற்றப்பட்டது குறித்த முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை ஏற்க இயலாது என தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

-//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//-

செயலாளர். 14/2/2019

பெறுநர்

1.திரு. M. மனோகரன்,
எண்.26D/1, R.C. தெரு,
கீழவாசல்,
எட்டையபுரம்,
தூத்துக்குடி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
எட்டையபுரம் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
என்.ஜி.ஓ.,பி.காலனி,
பெருமாள்புரம் அஞ்சல்,
திருநெல்வேலி.

4.மாவட்ட ஆட்சித் தலைவர்,
தூத்துக்குடி மாவட்டம்.

5.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை –108.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
ஊராட்சிப் பிரிவு உதவிப் பிரிவு அலுவலர்.